# 07-11-2024 செய்தி

## உயர் கல்வி மாணவர்களுக்கு எளிதாக கல்விக் கடன்

**'வித்யாலக்ஷ்மி'**

- நாட்டின் தலைசிறந்த அரசு மற்றும் தனியார் உயர் கல்வி நிலையங்களில் சேர்க்கை பெறும் மாணவர்கள் எளிதாக கல்விக் கடன் பெற வழிவகுக்கும் பிரதமரின் 'வித்யாலக்ஷ்மி' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
- தரமான உயர் கல்வியைப் பெறுவதில் மாணவர்களுக்கு பணப் பிரச்னை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கில், ரூ. 3,600 கோடி மதிப்பீட்டில் இந்தப் புதிய திட்டம் செயல்படுத்தப்படுவதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.
- இத்திட்டத்தின்கீழ், நாட்டின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் எந்தவொரு மாணவரும் பிணையோ, உத்தரவாத கையொப்பமோ இன்றி வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் கல்விக் கடன் பெற முடியும். முழு கல்விக் கட்டணம் மற்றும் படிப்பு சார்ந்த இதர செலவுகள் இதில் அடங்கும்.
- தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பின் (என்ஐஆர்எஃப்) தரவரிசைப் பட்டியலின் படி, நாட்டின் 860 தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெற முடியும்.
- ஆண்டுதோறும் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பலனடைவர்.
- பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டம் தேசிய கல்விக் கொள்கை - 2020 -இன் கீழ் மற்றொரு முக்கிய முயற்சியாகும். மாணவர்களுக்கு ஏற்ற எளிமையான வெளிப்படையான நடைமுறைகளின் மூலம் முற்றிலும் எண்ம (டிஜிட்டல்) முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- ரூ. 7.5 லட்சம் வரையிலான கடனுக்கு 75 சதவீத உத்தரவாதத்தை மத்திய அரசு அளிக்கும், அத்துடன், ரூ, 8 லட்சம் வரையிலான ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் வேறெந்த உதவித் தொகை அல்லது வட்டி மானியத் திட்டங்களின் கீழ் பலனடையாத மாணவர்கள் ரூ. 10 லட்சம் வரையிலான கல்விக் கடனுக்கு 3 சதவீத வட்டி மானியம் பெறலாம். இந்த வட்டி மானியம் ஆண்டுக்கு ஒரு லட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டத்துக்கான ஒருங்கிணைந்த இணையதளத்தில் மாணவர்கள் கல்விக் கடன், வட்டி மானியம் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

## வேளாண்மைச் சார்ந்த துறைகளின் கடன் பொதுத் துறை வங்கிகளுக்கு நிதியமைச்சகம் அறிவுறுத்தல்

- நடப்பு நிதியாண்டில் வேளாண்மை சார்ந்த துறைகளில் கடன் இலக்கை எட்ட வேண்டும் என்று பொதுத்துறை வங்கிகளை நிதியமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.
- கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் பண்ணை சார்ந்த தொழில்கள் வேளாண்மை சார்ந்த தொழில்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இத்துறைகளுக்கு வழங்கப்படும் கடன் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தில்லியில் மத்திய நிதியமைச்சகத்தின் நிதிச்சேவைகள் துறைச் செயலர் எம். நாகராஜு தலைமையில் நடைபெற்றது.
- இத்துறைக்கு கடன் வழங்கும் பொதுத் துறை வங்கிகள் நபார்டு வங்கியின் பிரதிநிதிகள், மாநில, யூனியன் பிரதேச அரசுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.
- அப்போது நடப்பு நிதியாண்டில் வேளாண்மை சார்ந்த துறைகளில் கடன் இலக்கை எட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வங்கிகளை நிதிச் சேவைகள் துறைச் செயலர் கேட்டுக் கொண்டார்.
- மேலும் மாநில அரசுகளும் வேளாண்மை சார்ந்த துறைகளுக்கு கடன் வழங்கப்படுவதை கண்காணித்து வங்கிகளின் செயல்பாடுகளுக்கு உரிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.
- கடன் வழங்குவதில் மண்டல அளவில் ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இருக்கக் கூடாது. இது தொடர்பாக அவ்வப்போது வங்கிகள் மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி ஆலோசிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## கூட்டாட்சியில் நிதிப் பகிர்வு

- கனிம வளங்கள் மீதான வரியை வசூலிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கா மத்திய அரசுக்கா என்பது தொடர்பான வழக்கில், மாநில அரசுகளுக்கே அந்த அதிகாரம் என உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு பெரும் கவனம் ஈர்த்திருக்கிறது.
- தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வின் இந்த உத்தரவு, இந்தியக் கூட்டாட்சி வரலாற்றில் மிகவும் முக்கியமானது.
- இந்த விவாதத்தின் நீட்சியாக, உள்ளாட்சி நிர்வாகத்தில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டியதன் அவசியமும் பேசப்பட வேண்டும்.

**மாநிலச் சட்டங்களின் வலிமை**

- அரசமைப்புச் சட்டக்கூறு 246, அட்டவணை 7, மத்திய அரசுக்கான அதிகாரங்கள் (பட்டியல் 1), மாநில அரசுக்கான அதிகாரங்கள் (பட்டியல் 2), மத்திய - மாநில அரசுகள் இரண்டுக்குமான ஒருங்கிணைந்த அதிகாரங்கள் (பட்டியல் 3) ஆகியவற்றை விளக்குகிறது.
- மத்திய அரசுக்கான அதிகாரங்களை வரையறுக்கும் பட்டியல் 1. வரிசை எண் 54இல் (Entry 54 of List I) சுரங்கங்கள், கனிமங்களின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தவும் மேம்படுத்தவும் நாடாளுமன்றம் வகுக்கும் சட்டத்தால் அறிவிக்கப்படும் அளவுக்கு மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.
- இந்தப் பட்டியல் 1, வரிசை எண் 54இல் குறிப்பிடப் பட்டிருப்பவை மாநில அரசுகள் வரி விதிக்கும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துமா இல்லையா என்பதே முக்கிய கேள்வியாக எழுந்தது.
- இங்குதான், மாநில அரசுகளுக்குக் கனிம வளங்கள் மீதான வரி விதிப்பு குறித்து அதே ஏழாவது அட்டவணைப் பட்டியல் 2, வரிசை எண் 50இல் (Entry 50 of List II), கனிம மேம்பாடு தொடர்பான சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தால் விதிக்கப்படும் வரம்புகளுக்கு உட்பட்ட கனிம உரிமைகள் மீதான வரிகள் விதிப்பதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது எனக் குறிப்பிடுகிறது.

- பட்டியல் இரண்டு, வரிசை எண் 50இல் உள்ள இதனைக் குறிப்பிட்டு, கனிம வளங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தாலும் வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு உள்ளது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.
- தங்களுக்கு வகுத்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்கும்போது, அதில் மத்திய அரசு தலையிட முடியாது என்பதை மிகத் தெளிவாக இந்த அமர்வு குறிப்பிட்டிருக்கிறது.
- மேலும், மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் மத்திய அரசின் சட்டங்களுக்குக் குறைவானவை அல்ல என்றும் நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

## உள்ளாட்சிகளின் நிலை என்ன?

- மாநிலங்களுக்கு எதிரான மத்திய அரசின் பாரபட்ச நிதிப் பகிர்வு முறையை தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் சுட்டிக்காட்டும் அதே நேரத்தில், தங்கள் நிதிப் பகிர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தங்கள் உள்ளாட்சிகளுக்கு உரிய நிதி ஒதுக்கீட்டினை அம்மாநிலங்கள் செய்திருக்கின்றனவா என்பதையும் பார்ப்பது அவசியம்.
- உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வில் முன்னுதாரணமாக இருக்கும் கேரள அரசு, இன்றளவும் தனது உள்ளாட்சிகளுக்குச் சுமார் 27% வரை நிதி ஒதுக்கிவருகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போதும் கேரள ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி வெளிப்படையாக ஓர் இணைப்புப் பட்டியலாகவே தாக்கல் செய்யப்படுகிறது. இதற்கு மாறாக, தமிழ்நாடு அதிகபட்சமாக 10% நிதியைத்தான் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கிவருகிறது.
- 1996இல் 8%ஆக இருந்த உள்ளாட்சிகளுக்கான மாநில அரசின் ஒதுக்கீடு, கடந்த 25 ஆண்டுகளில் 2% அளவுக்கே உயர்த்தப்பட்டிருக்கிறது.
- மேலும், மாநில நிதிக் குழு நிதி (SFC) ஓர் ஊராட்சிக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதில் வெளிப்படைத்தன்மை இல்லாமல், எப்போது, எவ்வளவு தொகை வரும் என்று கணிக்க முடியாத நிலையில், அது எப்போது வேண்டுமானாலும் நிறுத்தியும் வைக்கப்படலாம் என்கிற போக்குதான் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவிவருகிறது.
- இதனால், சிறிய ஊராட்சிகள் கூடத் தங்கள் நிதி வருவாயைத் திட்டமிட முடியாத சூழல் நீடிக்கிறது.
- இவ்வாறு மிகக் குறைவாக ஒதுக்கப்படும் மாநில நிதிக் குழு ஒதுக்கீட்டினையும்கூட முழுமையாக ஊராட்சிகள் பெற முடிவதில்லை.
- ஊராட்சிகளுக்கு நேரடியாக வர வேண்டிய மாநில நிதிக்குழு, நிதி ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட தொகையை உள்ளாட்சிகளின் எந்தவித ஒப்புதலும் இல்லாமல் மாநில அளவிலேயே பிடித்துக்கொண்டு, வேறு திட்டங்களுக்கு ஏறத்தாழ ரூ.900 கோடி வரை திருப்பி விடப்பட்டிருக்கிறது.
- இது 2023 - 24ஆம் நிதி ஆண்டில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த மாநில நிதிக்குழு நிதியில் (ரூ.6,578.5 கோடி) கிட்டத்தட்ட சுமார் 13% நிதியாகும்.
- பல ஆண்டுகளாக உள்ளாட்சிகளின் அடிப்படைப் பணிகளுக்கு மிகவும் உதவியாக இருந்த முத்திரைத்தாள் வரி, சிறுகனிம வரி, கேளிக்கை வரி உள்ளிட்டவற்றின் தொகுக்கப்பட்ட நிதியையும் தமிழ்நாடு அரசு விட்டு வைக்கவில்லை.
- ஊராட்சிகளுக்கு எவ்விதத் தகவலும் தெரிவிக்காமல், தன்னிச்சையாக முடிவெடுத்து இந்த நிதியின் ஒரு பகுதியை மாநில அரசின் திட்டத்துக்கு மாற்றிக்கொண்டுவிட்டது.
- மேலும், மாநில நிதிக் குழு நிதி எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிற வரையறை சென்னையிலேயே நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. அவை ஊராட்சியில் நிர்ணயிக்கப்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவு.
- அதோடு, கிராம ஊராட்சிகள் பராமரித்துவந்த சொந்த வருவாய்களுக்கான வங்கிக் கணக்குகளைக் கூடப் பராமரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, சென்னையில் இருக்கும் ஒரே ஒரு வங்கிக் கணக்கில் தமிழ்நாட்டின் அனைத்து ஊராட்சிகளுக்குமான நிதி பராமரிக்கப்பட்டு வருகிறது.

## நிதிச் சுதந்திரம்

- உள்ளாட்சிக்கான நிதிப் பகிர்வு தொடர்பான மாநில அரசின் கட்டுப்பாடுகள் ஒரு பக்கம் இருக்க, ஊராட்சி ஒன்றிய அலுவலக அளவில் வரும் வாய்மொழி உத்தரவுகளும், அரசியல் அழுத்தங்களும் உண்மையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஊராட்சியின் நிதிச் சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன.
- உள்ளாட்சிக்கான நிதிப் பகிர்வு தொடர்பாக டெல்லி ஜந்தர் மந்தரில் நடந்ததைப் போன்ற ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும் என்றால், தினம் தினம் சென்னை வள்ளுவர் கோட்டத்திலோ சேப்பாக்கத்திலோ உள்ளாட்சிகள் போராட்டங்களை நடத்திக்கொண்டு தான் இருக்க வேண்டியிருக்கும். அப்படி இருக்கிறது உள்ளாட்சிகளின் நிதி நிலை!

## கடமைகளை நிறைவேற்ற முடியுமா?

- கனிம வளங்களுக்கு வரி விதிப்பது தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவில், 'அரசமைப்பு வழங்கி உள்ள பொறுப்புகளைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு உரிய நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும்' எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- கூட்டாட்சி நிர்வாகத்தில் முறையான நிதிப் பகிர்வு முக்கியம் என்பதை வலியுறுத்துவதாக இருக்கும் இந்தக் கருத்து மத்திய அரசுக்கு மட்டுமல்ல, மாநில அரசுக்கும் பொருந்தக் கூடியதுதான்.
- நிதி ஆதாரங்கள் இல்லாமல் அரசமைப்புச் சட்டம் வழங்கி உள்ள பொறுப்புகளை எவ்வாறு உள்ளாட்சிகளால் செயல்படுத்த முடியும்?
- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 110 இன்படி குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு அமைத்தல், கிராமப்புறச் சந்தைகளை அமைத்தல், சுடுகாடு இடுகாடு அமைத்தல், குளங்கள் பராமரிப்பு, பொதுக் கழிப்பறைகள் - தனிநபர் இல்லக் கழிப்பறைகளை அமைத்தல், கழிவு நீர்க் கால்வாய்கள் மழைநீர்க் கால்வாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பல பணிகள் ஒரு கிராம ஊராட்சி தன் மக்களுக்காகச் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்தக் கட்டாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான நிதி இல்லாமல் என்ன செய்ய முடியும்? மக்களிடம் தினம் தினம் வசைமொழிகளைத்தான் வாங்க முடியும். அதுதான் நடந்துகொண்டிருக்கிறது தமிழ்நாட்டு உள்ளாட்சிகளில்!

## மாற்றம் வருமா?

- அரசமைப்புச் சட்டக்கூறு 246 இன்படி, மாநில அரசுகளுக்கு வகுத்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.
- அதேவேளை, கிராமப்புற / நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு உரிய நிதிகளையும், நிர்வாகிகளையும், பணிகளையும், அதிகாரங்களையும் அவை தன்னாட்சி பெற்ற அரசுகளாகச் செயல்படுவதற்கு வழங்க வேண்டும் என அதே அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 243இல் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு பல வேளைகளில் மிகச் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறது அல்லது மறந்தே விடுகிறது.
- சட்டப்படியான நிதிப் பகிர்வுகளைப் பெற மாநில அரசுகளுக்கு இருக்கும் உரிமை உள்ளாட்சிகளுக்குக் கிடையாதா என்கிற கேள்வியும் எழுகிறது. அரசமைப்புச் சட்டக்கூறு 246ஐ நடைமுறைப்படுத்தும்போது, சட்டக்கூறு 243ஐயும் உள்ளபடி நடைமுறைப்படுத்துவதுதானே முறையாக இருக்கும்?